

பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பேராசிரியர் பெருந்தகை அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அருப்புக்கோட்டை கிளை நூலகத்தில் விரிவான ஆய்வு செய்தார். மேலும் வாசகர்கள் மற்றும் நூலகரிடம் கலந்துரையாடி, சுகாதார வளாகம் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மதுரை மாவட்டம் ஒத்தக்கடை வேலம்மாள் காம்பவுண்டில் (விவசாயக் கல்லூரி எதிரே) அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், கூடுதல் ஆட்சியர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மோனிகா ராணா, மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.

## விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மாநகர - ஒன்றிய - நகர - பேரூர் - பகுதி கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிக இடங்களில் தி.மு.கழகம் அமோக வெற்றி பெற வேண்டியும், அதற்கான பல்வேறு ஆக்கப் பணிகள் மேற்கொள்வது குறித்தும் விவாதித்திட விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தில் உள்ள நிர்வாக அமைப்புக்களின் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம், கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக

ஒன்றியம் - நகரம் - பேரூர்- பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்

| நாள் | நேரம் | ஒன்றியம் - நகரம் - பேரூர்- பகுதி | இடம் |
|---|---|---|---|
| 03-09-2024 செவ்வாய் | காலை 10.30 | சிவகாசி வடக்கு | ஸ்டாலின் செல்லத்துரை திருமண மண்டபம், எம்.புதுப்பட்டி |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 5.00 | காரியாபட்டி மேற்கு | இராஜாமணி திருமண மண்டபம், மல்லாங்கிணர் |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 6.00 | விருதுநகர் நகரம் | வி.வி.எஸ்.திருமண மண்டபம், விருதுநகர் |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 6.00 | சிவகாசி கிழக்கு | சமுதாயக்கூடம், மாரனேரி |
| 04-09-2024 புதன் | காலை 10.00 | காரியாபட்டி கிழக்கு | பேரூராட்சி திருமண மண்டபம், காரியாபட்டி |
| 04-09-2024 புதன் | காலை 10.00 | நரிக்குடி வடக்கு | அல்அமீன்.திருமண மஹால், வீரசோழன் |
| 04-09-2024 புதன் | மாலை 5.00 | நரிக்குடி தெற்கு | நாடாளுமன்ற உறுப்பினர் தோட்டம், கே.கே.மாணிக்கம் |
| 04-09-2024 புதன் | மாலை 5.00 | காரியாபட்டி பேரூர் | பேரூராட்சி திருமண மண்டபம், காரியாபட்டி |
| 04-09-2024 புதன் | மாலை 6.00 | பகுதி - 5, சிவகாசி மாநகரம் | சமுதாயக்கூடம் |
| 04-09-2024 புதன் | மாலை 7.00 | பகுதி - 4, சிவகாசி மாநகரம் | ராயல் மினி மஹால் |
| 05-09-2024 வியாழன் | மாலை 6.00 | பகுதி - 1, சிவகாசி மாநகரம் | தேவர் திருமண மண்டபம் |
| 05-09-2024 வியாழன் | மாலை 7.00 | பகுதி - 3, சிவகாசி மாநகரம் | ஆர்.ஆர்.திருமண மண்டபம் |
| 06-09-2024 வெள்ளி | காலை 10.00 | திருச்சுழி வடக்கு | ஜி.எஸ்.டி.திருமண மஹால், திருச்சுழி |
| 06-09-2024 வெள்ளி | மாலை 7.00 | பகுதி - 2, சிவகாசி மாநகரம் | ஐயப்பன் திருமண மண்டபம் |
| 06-09-2024 வெள்ளி | மாலை 7.00 | பகுதி - 6, சிவகாசி மாநகரம் | ஆர்.எஸ்.ஆர்.திருமண மஹால் |
| 07-09-2024 சனி | மாலை 3.00 | திருச்சுழி தெற்கு | சத்தியா திருமண மண்டபம், ம.ரெட்டியாபட்டி |
| 09-09-2024 திங்கள் | மாலை 6.00 | சிவகாசி மாநகரம் | கனி திருமண மஹால், திருத்தங்கல் |

**அமைச்சர் தங்கம் தென்னரசு**
செயலாளர்
விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி ஒன்றியம் விளத்தூர் ஊராட்சி முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி 2023–2024 கீழ் ரூபாய் 8லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடையை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பரமக்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெயக்குமார், நைனார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அண்ணாமலை, பரமக்குடி முன்னாள் மேற்கு ஒன்றியச் செயலாளர் சந்திரசேகர், இராமநாதபுரம் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் செந்தில் செல்வானந்த், இராமநாதபுரம் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பன்னீர்செல்வம், பரமக்குடி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் ஜோசப் ராஜா, மாவட்ட கழகப் பிரதிநிதி பிரபாகரன், விளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அருளானந்தம் மற்றும் கிளை கழகச் செயலாளர்கள், கிளைக் கழகப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்லத் திட்டம் மூலம்

# வீடுகள் பெற்ற பயனாளிகள் விரைவில் பணிகளை முடிக்க ஒத்துழைப்பீர்!

### கட்சி நிர்வாகிகளுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவு!

சின்னாளபட்டி, செப். 3 -

ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகளை பெற்ற பயனாளிகள் விரைவில் பணிகளை முடிக்க உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சிநிர்வாகிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்விடுத்துள்ளார். கலைஞரின் கனவு இல்லம் திட்டம் பயனாளிகளுககு கட்டிட பொருட்கள் சலுகை விலையில் கிடைக்க அமைச்சர் ஐ.பெரியசாமி ஏற்பாடு செய்து வருவதற்கு பயனாளிகள் பாராட்டு தெரிவித்துள்ள னர்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, இந்தியாவே போற்றும் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முப்பெரும் விழாவாக ஆத்தூர் தொகுதியில் கொண்டாட வேண்டும். கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் மாணவர்களுக்கென தனி போட்டிகளை நடத்துவதோடு கிராமங்கள் தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்றார். ஆத்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் ஒன்றியம் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் சுமார் 2500 பயனாளிகள் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகளை கட்டுவதற்கு ஆணை பெற்றுள்ளார்கள். அவர்கள் விரைவாக வீடுகளை கட்டி முடிக்க அந்தந்த பகுதியில் உள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என வேண்டுகோள்விடுத்தார்.

கூட்டுறவுத்துறை அமைச்சராக ஐ.பெரியசாமி இருந்த போது ஆத்தூர் தொகுதியை சேர்ந்த 120பேருக்கு ஒரு ரூபாய் கூட வாங்காமல் பணிக்கான ஆணையை வழங்கியதோடு அவர்கள் கூட்டுறவுத் துறைக்கு செலுத்த வேண்டிய டெபாசிட் தொகையும் செலுத்தி 120 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றினார். தற்போது கலைஞரின் கனவு இல்லம் திட்ட பயனாளிகளுக்கு சலுகை விலையில் கட்டிட உபகரணங்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப் பதற்கு பயனாளிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

நிகழ்ச்சியின் போது தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மாநகர துணை மேயர் ச.ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், ஆத்தூர் முருகேசன், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், குட்டத்து ஆவரம்பட்டி டென்னி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் மணி (எ) நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரெட்டியார்சத்திரம் ரமேஷ், ஆத்தூர் மேற்கு ஒன்றியம் காங்கேயன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லைசுபாஷ், மற்றும் திண்டுக்கல் நகர தி.மு.க. நிர்வாகிகள் நந்திநடராஜன், நரசிங்கம், 7வது வார்டு வீரபாண்டி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## இரா.ஆவுடையப்பன் தலைமை! வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாடு! நெல்லை மாவட்டம் - திசையன் விளையில்

# அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு - கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

நெல்லை.செப்.3.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாவட்டம் திசையன்விளை வி.எஸ்.ஆர். விளையாட்டு மைதானத்தில் அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி 06.09.2024 முதல் 09.09.2024 வரை (அதாவது வெள்ளி, சனி,(ஞாயிறு, திங்கள்)4 நாட்கள் நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாட்டில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் கழக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக உள்ளாட்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி,நிதி மற்றும் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மீனவர் நலன்மீன்வளத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிகள் பற்றிய விவரம் வருமாறு:-

06.09.2024 (வெள்ளிக்கிழமை) இரவு 8 மணி அளவில் துவக்க விழா நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று ஆண்களுக்கான போட்டியை துவக்கி வைத்து விழா பேருரை ஆற்றுகிறார். பெண்களுக்கான போட்டியை அமைச்சர் பெ.கீதாஜீவன் பங்கேற்று துவக்கி வைக்கிறார்.

நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்பு செயலாளர் எஸ்.ஆஸ்டின்,

மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சா.ஞானதிரவியம், சித்திக், பிரபாகர பாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமன்டேவிட், கனகராஜ், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

07.09.2024 (சனிக்கிழமை) இரவு 8 மணி அளவில் நடைபெறும் நிகழ்வில் இராதாபுரம் ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு தலைவர் அனிதா பி.பிரின்ஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று ஆண்களுக்கான போட்டியை துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார். அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பெண்களுக்கான போட்டிய துவக்கி வைத்து விழா உரையாற்றுகிறார்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், பாளை ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன், ஒன்றியச் செயலாளர்கள் போர்வெல் கணேசன், ராஜன், ஆரோக்கியஎட்வின், வேலங்குளம் கண்ணன், பரணி சேகர், சுடலைக் கண்ணு, செல்வகருணாநிதி, முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், ராஜா ஞான திரவியம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

08.09.2024 (ஞாயிற்றுக் கிழமை) இரவு 8 மணி அளவில் நடைபெறும் நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ஐ.பெரியசாமி பங்கேற்று ஆண்களுக்கான போட்டியை துவக்கி வைத்து விழா பேருரை ஆற்றுகிறார். அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று பெண்களுக்கான போட்டியை துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார்.

09.09.2024 (திங்கட் கிழமை) இரவு 8 மணி அளவில் நடைபெறும் நிகழ்வில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் நம்பி வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று போட்டியை துவக்கி வைத்து விழா பேருரை ஆற்றுகிறார்.

பரிசுகள் பற்றிய விவரம் வருமாறு:-

ஆண்கள் பிரிவு முதல் பரிசு ரூபாய் 3,00,000 ம் நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, 2 ம் பரிசு ரூபாய் 2,00,000ம் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வி.நம்பி, 3 ம் பரிசு ரூபாய் 1,00,000ம் ராதாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பொன்.மீனாட்சி அரவிந்தன்,சிதம்பராபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பேபி முருகன், உதயத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கந்தசாமி மணிகண்டன் ஆகியோர்.

4ம் பரிசு ரூபாய் 1,00,000 ம் திசையன்விளை பேரூராட்சி கவுன்சிலர் கண்ணன்,ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ராம் கிஷோர் பாண்டியன் ஆகியோர்.

பெண்கள் பிரிவு முதல் பரிசு ரூபாய் 2,00,000 ம் ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு தலைவர் ராதாபுரம் ஒன்றியம் அனிதா பிரின்ஸ்.

2ம் பரிசு ரூபாய் 1,00,000 ஒன்றிய இளைஞரணி எஸ்தாக் கெனிஸ்டன்,3ம் பரிசு ரூபாய் 75,000 ம்.ஒன்றிய குழு துணைத் தலைவர் இளையபெருமாள்,

4ம் பரிசு ரூபாய் 75,000 ம் அப்புவிளை ஊராட்சி மன்ற தலைவர் சாந்தா மகேஸ்வரன்,திசையன்விளை பேரூராட்சி கவுன்சிலர் கமலா சுயம்பு ராஜன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

வெற்றி கோப்பைகளை வி.எஸ்.ஆர். சுபாஷ்.வி.எஸ். ஆர்.சுரேஷ் ஆகியோர் வழங்குகின்றனர்.

விழா ஏற்பாடுகளை நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் செய்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா.சடகோபன்

### செப்டம்பர் 3 (1979)



சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.

1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.

கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.

தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**